# பொதுக்காலம் 6ஆம் ஞாயிறு - இரண்டாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

இனியதொரு காலையை நமக்களித்த இறைவனுக்கு நன்றி பகரவும், தொழுநோயை குணமளித்த இறைவனால் அகிலத்தின் அனைத்து நோய்களையும் குணமாக்க இயலும் என்ற விசுவாசத்தைப் பெற்று வாழ இன்றைய பொதுக்காலம் 06ஆம் ஞாயிறு திருப்பலி நம்மை அழைக்கிறது.

தள்ளப்பட்டு, ஒதுக்கப்பட்டவர்களாய் வாழும் தொழுநோயாளிகளை குணமாக்கியது அவர்களின் அசைக்க முடியாத நம்பிக்கையே. நாமும் சூழ்நிலைகளால் அலைக்கழிக்கப்பட்டாலும், இறைவன் மீது மட்டும் நமது நம்பிக்கையை வைத்தால், அற்புதங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

தொழுநோயாளி பற்றியும், அவருக்கான சட்டங்கள் பற்றியும் லேவியர் ஆகம வார்த்தைகள் எடுத்துரைக்கிறது. நோயுற்றவனை 'தீட்டு' என்று கூறி அப்புறப்படுத்தினர். இக்காலத்திலும் தனிமைப்படுத்துதல் என்றும், தன் பாதுகாப்பு என்றும் தொழுநோயாளிகளாய் வாழ்வோர் உண்டு.

கருப்பையில் சாதி இல்லை.

கல்லறையில் சாதி உண்டு.

இரத்தத்திலும், வியர்வையிலும் வெளிப்படாத இனவெறி

பிறப்பிலும் இனத்திலும் தொடர்கிறது.

இன்றைய சமூகத்தின் தொழுநோய் இதுதானா?

இன்றைய நற்செய்தியில், தொழுநோயாளியின் விசுவாசத்தை மெச்சிய இயேசு மகிழ்வுடன் அவரைக் குணமாக்குகிறார். அன்றைய சமூகத்தில் தீட்டு எனப்பட்ட தொழுநோய் இயேசுவின் கரத்தால் தூய்மையாகிறது.

உறவுகளால் ஒதுக்கப்பட்ட தொழுநோயாளிகளுக்காக உயிருள்ளவரை தன்னை அர்ப்பணித்த இதயம் ஒன்று நம்மிடையே உண்டு. ஆம், அன்னை தெரசா போல் தொழுநோயாளிகளை பேணாவிட்டாலும், உறவுகளை

ஒதுக்காமலும், உணர்வுகளை மதிப்போடும் நடத்துவோம். இச்சிந்தனைகளை மனதிற்கொண்டு இப்பலியில் பங்கேற்போம்.

## மன்றாட்டுகள்

*பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

1. விசுவாசத்தை உறுதி பெறச் செய்தவரே எம் இறைவா!

எம் திருச்சபையை வழிநடத்தும் திருச்சபைத் தலைவர், பணியாளர்கள் அனைவரும் உமக்கு சான்று பகரும் வாழ்வை மேற்கொண்டு விசுவாசத்தைக் காத்துக் கொள்ளவும், மக்களை இறையாட்சிப் பாதையில் நடத்தி, விசுவாசத்தில் உறுதிபட வல்லமை அருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. தீட்டு என்று புறந்தள்ளிய மக்களை அன்போடு அணைத்தவரே எம் இறைவா!

எம் நாட்டை ஆளும் ஆட்சியாளர்கள், அதிகாரிகள் இனவெறியை மக்களிடையே தூண்டாமல், பண வேற்றுமையை மக்களிடையே ஏற்படுத்தாமல், விவசாயத்தின் மேன்மையை உணர்ந்து, சரியான பாதையில் ஆட்சி புரிந்து நாட்டை வளர்ச்சிப் பாதையில் நடத்திட நல்லறிவு தர இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. நான் விரும்புகிறேன் குணமாகு என்று குணமாக்கியவரே எம் இறைவா!

இன்றைய கால சூழலில் பல்வேறு வகையான நோயாலும், வேதனைகளாலும் கலங்கிக் கொண்டிருக்கும் மக்கள் மீது கருணை பொழிந்து குணமாக்கியருள வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. மக்கள் மீது பரிவு கொள்பவரே இறைவா!

எம் பகுதியில் வேளாண்மை சிறக்க உகந்த கால நிலை ஏற்படவும், குடும்பங்களில் அமைதி, மகிழ்ச்சி நிறைவாகவும், படிக்கும் மாணவர்கள்

பொதுத் தேர்வை சிறந்த முறையில் எதிர்கொள்ள தேவையான ஞானம் தரவும், வேலைவாய்ப்பு, திருமணம், குழந்தை வரம் வேண்டுவோர் உமதருளால் பெற்று மகிழவும் வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

நன்றி: ஆசிரியை. திருமதி. ஜோஸ்பின் சாந்தா லாரன்ஸ், பாவூர்சத்திரம்.

Rev. Fr. Amirtha Raj Sundar J., amirsundar@gmail.com; + 91 944 314 0660;

www.arulvakku.com